உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்
S.C No.284/2022

பெயர் : குருசாமி
தகப்பனார் பெயர் : குழந்தை செட்டியார்
கணவர் பெயர் :
வயது :74
கிராமம் :
வட்டம் :மதுரை
தொழில் : வேலையில்லை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

05.08.2024

முதல் விசாரணை:

நான் தற்போது கான்பாளையம், மதுரையில் வசித்து வருகிறேன். நான் இதற்கு முன்பு நகை வியாபாரம் ஆர்டர் வாங்கி செய்து கொண்டிருந்தேன். மேலூரில் நகைக்கடையில் இருந்து ஆர்டர் வரும் அதை வாங்கி செய்து கொடுப்பேன். ஆஜர் எதிரிகளை எனக்கு அடையாளம் தெரியவில்லை. எதிரி 1 - கௌரியை மட்டும் எனக்கு அடையாளம் தெரிகிறது. நான் 2008 ம் ஆண்டு மதியம் சுமார் 4 மணியளவில் மதுரையில் இருந்து பஸ்சில் மேலூருக்கு வந்து கொண்டிருந்தேன். ARM தங்க நகைக்கடைக்கு சென்றேன். நான் நகைக்கடையில் இருந்து நீலமேகம் என்னை அழைத்ததன் பேரில் சென்றேன். அப்போது மணி சுமார் இரவு 7.00 மணி இருக்கும், கரண்ட் போய்விட்டது. அப்போது என்னுடைய பையில் 1 கிலோ, 300 கிராம் எடையுள்ள தங்க நகை உள்ள பையை பிடிங்கிக்கொண்டு ஓடிவிட்டார்கள். இருட்டாக இருந்ததால் எனக்கு அடையாளம் தெரியவில்லை. ஒரு கிலோ 300 கிராம் எடையுள்ள தங்க நகை அதில் வளையல், செயின், மாலை இருந்தது அதனுடைய எடை தனித்தனியாக ஞாபகம் இல்லை. மேற்படி தங்கநகைகள் நீதிமன்றத்தின் மூலம் பெற்றுவிட்டேன். வாங்கிய நபர்களிடம் திருப்பிக்கொடுத்துவிட்டேன். அதன்பிறகு நான் மேலூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் நகல் சாட்சியிடம் காட்டப்பட்டு, சாட்சி தனக்கு படிக்க முடியவில்லை என்று

குறிப்பிடுகிறார். தங்கநகைகள் திருடு போய்விட்டன என்று நான் சொல்ல காவலர்கள் எழுதிக்கொண்டார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

நான் மதுரையில் இருந்து நகைக்கடை தொழில் செய்து வந்ததாகவும், கடந்த 03.09.2008 அன்று மதுரை மாட்டுத்தாவணி மதியம் சுமார் 3.00 மணியளவில் பஸ் ஏறி மேலூருக்கு சுமார் 4.30 மணியளவில் வந்து, நான் நகை ஆர்டர் எடுத்த நகைக்கடையாளரிடம் டெலிவரி கொண்டு வரும்போது, அதன் விபரத்தை மேலூரில் உள்ள அனைத்து ஆர்டர் எடுத்து கடைகளுக்கும் தகவல் தெரிவித்து விட்டு பின்பு ஏஆர்எம் நகைக்கடையில் இருக்கும் போது, சுமார் 7.00 மணியளவில் நீலமேகம் என்பவர் போன் செய்து கூப்பிடவும், உடனே அவர்களிடம் சொல்லிவிட்டு நீலமேகம் கடைக்கு செல்லும் போது, கடையில்இருந்து சிறிது தூரம் செல்லும் போது என்னுடைய பையை தொங்கவிட்டு சென்று கொண்டிருக்கும் போது நான் நகை வைத்திருந்த துணிப்பையை எனது கையில் பறித்து கொண்டு ஓடினார், உடனே அலறி சத்தம் போடவும், அருகில் இருந்தவர்கள் வந்தவுடன் தேடிப்பார்த்தும், அவர்களை பிடிக்கமுடியவில்லை. நான் கொண்டு தங்கஆபரண நகை 1 கிலோ 300 கிராம் எடையுள்ள தங்கநகைகளை எதிரிகள் பறித்து கொண்டு போனதால் அந்த அதிர்ச்சியில் இருந்த நான் மேலூர்

நகைக்கடை சங்க தலைவர் அவர்களிடம் சொல்லிட்டு மதுரை ஆஸ்பத்திரியில் சேர்ந்து சிகிச்சை பெற்று 16.11.2008ம் தேதி மேற்படி சம்பவத்திற்காக மேலூர் காவல்நிலையத்தில் ஆஜராகி புகார் கொடுத்தேன் என்று கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளை அடையாளம் தெரியவில்லை என்றும், புகாரை படிக்க இயலாது என்று எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை :

1வது எதிரி எனக்கு ஏற்கனவே பழக்கமா என்றால் பழக்கமில்லை. அவரை நான் நகைக்கடை பஜாரில் பார்த்துள்ளேன். அதனால் எனக்கு தெரியும். இந்த வழக்கில் அடையாள அணிவகுப்பு சிறைச்சாலையில் நடத்தப்பட்டதா என்றால் இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்.M.சாமுண்டீஸ்வரி பிரபா
உதவி அமர்வு நீதிபதி,
மேலூர்